1 மார் 2011
சென்னை-600 006

<u>சுருக்கம்</u> 006262

உயர்கல்வி – தமிழ்மொழி வழியில் கல்லூரிகள் / பல்கலைக்கழகங்களில் கலை, அறிவியல் மற்றும் பொறியியல் துறையில் பட்டப்படிப்பு / பட்டமேற்படிப்பு/ பட்டயப்படிப்பு படித்து தேர்ச்சி பெறும் மாணவர்களுக்கு வழங்கப்படும் சான்றிதழ்களில் பயிற்று மொழியினை குறிப்பிடுவதற்கு உயர்கல்வித் துறையின் கட்டுப்பாட்டிலுள்ள கல்வி நிறுவனங்களுக்கு அறிவுரை வழங்குதல் – ஆணை வெளியிடப்படுகிறது,

---

<u>உயர் கல்வித் (கே2) துறை</u>

அரசு ஆணை(நிலை) எண்.39

நாள்.18.02.2011
மாசி 6
திருவள்ளுவராண்டு 2042

<u>படிக்கப்பட்டது.</u>

அரசாணை (நிலை) எண்.145, பணியாளர் மற்றும் நிர்வாக *சீர்திருத்தத் துறை, நாள்.30.9.2010.*

-------

<u>ஆணை:</u>

தமிழ்மொழி வழியில் படித்துள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்க வகை செய்யும் அவசரச்சட்டம் (Tamil Nadu Ordinance No.3 of 2010), 5.9.2010 அன்று பிறப்பிக்கப்பட்டது. இச்சட்டத்தின்படி, நேரடி நியமனம் (Direct Recruitment) மூலமாக நிரப்பப்பட வேண்டிய அரசின் கீழ் வரும் பணிகளுக்கான நியமனங்களில் அனைத்துக் காலியிடங்களிலும் தமிழ்மொழி வழி படித்த நபர்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் நூற்றுக்கு இருபது விழுக்காடு (20%) என்ற அளவில் காலியிடங்கள் தனியே ஒதுக்கப்படுதல் வேண்டும். மேலே ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில் தமிழ் மொழி வழியில் படித்துள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்க வகை செய்ய பிறப்பிக்கப்பட்ட அவசர சட்டத்தின் நோக்கங்களை நிறைவேற்றத் தேவையான விதிகளை / நியமன தெரிவுமுறையினை வகுத்து ஆணை வெளியிடப்பட்டுள்ளது

2. மேலே பத்தி ஒன்றில் கூறப்பட்டுள்ள சட்டத்தின்படியான விதிமுறைகளை நிறைவேற்றும் பொருட்டு இது குறித்து ஆராயப்பட்டு, எதிர்வரும் ஏப்ரல் / மே–2011 பருவம் முதற்கொண்டு கலை, அறிவியல் மற்றும் பொறியியல் துறையில் பட்டப்படிப்பு (Under Graduate) / பட்ட மேற்படிப்பு (Post Graduate)/ பட்டயப்படிப்பு (Diploma Course) படித்து தேர்ச்சி பெறும் மாணவர்களுக்கு வழங்கப்படும் மாற்றுச் சான்றிதழில் அவர்கள் பயிலும் பயிற்று மொழியினை (தமிழ்

Copy linked to Secy

அல்லது ஆங்கில வழி) குறிப்பிடுமாறு கல்லூரிக்கல்வி இயக்குநர், தொழில் நுட்பக் கல்வி ஆணையர், அனைத்து பல்கலைக் கழக பதிவாளர், தேர்வு கட்டுப்பாட்டு அலுவலர் மற்றும் தன்னாட்சி கல்லூரி முதல்வர்கள் ஆகியோருக்கு தெரிவிக்கலாம் என அரசு முடிவு செய்து , அவ்வாறே ஆணையிடுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

க. கணேசன்
அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்
கல்லூரி கல்வி இயக்குநர், சென்னை–6.
தொழில் நுட்பக் கல்வி ஆணையர், சென்னை–25,
பதிவாளர்கள் / தேர்வு கட்டுப்பாட்டு அலுவலர்கள் / உயர்கல்வித்துறையின் கட்டுப்பாட்டிலுள்ள பல்கலைக்கழகங்கள்.
தன்னாட்சி கல்லூரி முதல்வர்கள்,
(சம்பந்தப்பட்ட பல்கலைக்கழக பதிவாளர்கள் வழியாக)
நகல்:
பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத்துறை, சென்னை–9.
தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை–6.
இ.கோ/உதிரி.

// ஆணைப்படி/ அனுப்பப்படுகிறது//

23/2/2011
பிரிவு அலுவலர்
23/2/11